1980 ஆகஸ்ட் 1] [திரு இரா. நெடுஞ்செழியன்]

எடுக்கப்படும். நான் முதலிலேயே சொன்னபடி இங்கே தரப் பட்ட தகவல்களை நான் கொடுத்திருக்கிறேன், இங்கே தரப் படாத தகவல்கள் இருந்தால் அவைகளைப்பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினையிலே பல்வேறு சம்பவங்களைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக் கிறார்கள். அவைகள் பூராவையும் ஆராய மாவட்ட நீதிபதி தலைமையிலே ஒரு விசாரணை கமிஷன் ஏற்படுத்தினால் சரியாக இருக்கும். அப்படியில்லாமல் உறுப்பினர்கள் தகவல்கள் கொடுத் தால் விசாரிக்கப்படும் என்று சொல்வது சரியல்ல, ஒரு நீதி விசாரணை அதற்காக அமைக்க ஏற்பாடுசெய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி, வழக்கு தொடரப் பட்டிருப்பதாலே, புலனாய்வில் இருப்பதாலே தனி விசாரணை தேவையில்லை. ஆனால் இப்படிப்பட்ட சம்பவம் நடைபெறா மல் இருக்க என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று ஆராயலாம்; அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த)ச் சட்ட முன் வடிவு, 1980.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, 1980ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த)ச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.